கரும்புச் சக்கையைப் பயன்படுத்தி மின்சாரம் உற்பத்தி செய்யும் திட்டம்.

56—(*வினா எண் 18853)—திரு. ஆர். தியாகராசன் : மாண்புமிகு சட்டம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலுள்ள எல்லா கரும்பு சர்க்கரை ஆலைகளில் கிடைக்கும் கரும்புச் சக்கையைப் பயன்படுத்தி மின்சாரம் உற்பத்தி செய்ய அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், திட்ட விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) மற்றும் (ஆ) கூட்டுறவு சர்க்கரை ஆலைகளிலிருந்து கிடைக்கும் கரும்புச் சக்கையை மட்டும் பயன்படுத்தி மின்சாரம் தயாரிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது. இவ்வகையில் முன்னோடித் திட்டமாக தருமபுரி மற்றும் கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் மின்சாரம் தயாரிக்க திட்டமிடப்பட்டுள்ளது. திருச்சி பாரத மிகுமின் திட்ட நிறுவனத்தினர் மேற்படி திட்டத்திற்காக திட்ட அறிக்கை தயார் செய்துள்ளனர். இது அரசின் ஆய்வில் உள்ளது.

உப்பை அடிப்படையாகக் கொண்ட இரசாயனத் தொழிற்சாலைகளைத் துவக்கும் திட்டம்.

57—(*வினா எண் 20767)—திரு. சி. கணேசன் : மாண்புமிகு சட்டம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உப்பை அடிப்படையாகக் கொண்ட இரசாயனத் தொழிற்சாலைகளைத் துவங்க அரசிடம் ஏதேனும் செயல் திட்டம் உண்டா?

(ஆ) தனியார்கள் தொடங்க முன்வந்தால் அவர்கட்குத் தேவையான உதவிகளைச் செய்துதர அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) அரசு நிறுவனமான தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ) இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள வாலிநோக்கத்தில் உப்பை மூலப்பொருளாகக் கொண்டு, மங்கனீசியம் உலோகம் (Magnesium Metal) தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை அமைக்க முடிவெடுத்து வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. இந்நிறுவனத்தின் திறன் ஆண்டொன்றுக்கு 600 மெகா டன்களாகும்.

(ஆ) உப்பைச் சார்ந்த இரசாயனத் தொழிற்சாலையை தனியார் துவங்க முன்வந்தால் அரசு அனைத்து உதவிகளையும் அளிக்கும்.